11-10-2012 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : மதம் - ஒரு பன்முகப் பார்வை**

**தொடக்க உரையாடல் : திரு . ராஜரட்ணம்**

மதம் - Religion என்ற சொல்லின் பொருளானது 'Religio' என்னும் சொல்லை அடிப்படையாகக் கொண்டு பிறந்தது. இதன் பொருள் ஒன்றாகக் கட்டுதல் / இணைத்தல் என்பதாகும். சமஸ்கிருதத்தில் இது 'YOGA' என அழைக்கப்படுகின்றது. மதம் என்ற சொல்லுக்கு அபிப்பிராயம் என்ற பொருளும் உண்டு.

மதம் என்பது மனித ஆற்றலை விட வலிமை வாய்ந்த ஆற்றல் ஒன்றை வணங்கும் ஒழுக்க முறையாகும். இச்சக்தியை சமூகவியலாளர்கள் கடவுள் அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி என உணர்ந்து அதனை நம்பி அதனைச் சார்ந்து அதற்குக் கீழ்படிந்து பின்பற்றும் மனப்பாங்கே மதம் எனக் கூறியுள்ளனர்.

**மதம் பற்றிய கருத்துக்கள்**

கடமைகளை தெய்வீகக் கட்டளைகளாகப் போற்றுவதுதே மதம் ஆகும். - இமானுவேல் கானற்
மனிதனிடம் மறைந்துள்ள தெய்வீகப் பண்புகள், ஆற்றல்கள் போன்றவற்றை வெளிப்படுத்துவதே மதம். - காந்தி
சமயம் என்பது சடங்குகளும் அமைப்புக்களும் குறியீடுகளும் மட்டுமன்றி அது இறை அனுபவ ஆய்வுநெறியும், தனிமனித மற்றும் சமூக ஈடேற்றத்துக்கான முடிவற்ற ஆன்மயாத்திரையாகும்.
மதம் என்பது ஓர் உலகப் பொதுவான நிறுவனமாகும்

**மதங்களின் தோற்றமும் அவற்றின் வகைப்படுத்தலும்**

மதங்கள் மனிதத் தேவையின் அடிப்படையிலேயே தோற்றம் பெற்றன
நம்பிக்கை (விசுவாசம்) சடங்குகள் (ஜதீகம்) போன்றவை தரும் உலகப்பார்வையால் மதங்கள் தோன்றின.(அறிய வேண்டுமாயின் விசுவாசம் கொள் என மத்தியகால இறைஞானிகள் கூறினர்.) இந்தத் தேவையே எம்மை அந்த அந்த மதங்களின் இறையியலுக்கு/ மெய்யியலுக்கு அழைத்து செல்கின்றது.

> பெரும்பாலான மக்களை மதங்கள் தமது வலைக்குள் சிக்க வைத்தன.
>
> இம்மக்கள் சக்தியைப் பயன்படுத்தி அரசுகளையே அடிமைப்படுத்தி மதங்கள் படிப்படியாக தங்கள் ஆதிக்கத்தை உயர்த்திக் கொண்டன

**வகைப்படுத்தல்கள்**

1.1 பழைய சமயங்கள்
1.2 உயர் சமயங்கள்
1.3 ஆன்மீக சமயங்கள்
1.4 வரலாற்றுச் சமயங்கள்

2.1 இயற்கைச் சமயங்கள்
2.2 வெளிப்பாட்டுச் சமயங்கள்

3.1 இறை இருப்பை ஏற்கும் சமயங்கள்
3.2 இறை இருப்பை ஏற்காத சமயங்கள்

**மதங்கள் வெளிப்படுத்தும் இறையியல் மெய்யியல் கருத்துக்கள்**


உள்ப்பொருள்வாதம் (Otological Proof)
மனித உள்ளத்தில் உள்ள கடவுள் எண்ணத்தைப் பயன்படுத்தி இறை இருப்பை நிலைநாட்டும் நியாயம்
அன்சலம், டெக்காட் ஆகியோர் இவ்வாத்தைப் பயன்படுத்தினர்.

பிரபஞ்சவியல் வாதம் (Cosmological Proof)
தோமஸ் அக்குவனஸ் இவ்வாதத்துக்குறிய அடிப்படைகளைத் தந்துள்ளார்

**மிகுதி அடுத்த பக்கம்**

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

**கணினிசார் குற்றங்கள் : சட்டங்களுடனான ஒரு பார்வை.**
தி. அனோஜன் | 18-10-2012



சார்ல்ஸ் பாபேஜ்

**சார்ல்ஸ் பாபேஜ்** அல்லது **சார்லஸ் பாபேஜ்** (Charles Babbage, டிசம்பர் 26, 1791 - அக்டோபர் 18, 1871) பிரித்தானிய கணிதவியலாளர், கண்டுபிடிப்பாளர். இன்றைய கணினிகள் பயன்படுத்தும் எந்திர கணக்கியல் இயந்திரங்களைக் கண்டுபிடித்தவர்.

1991 இல் பிரித்தானிய விஞ்ஞானிகள் இவர் திட்டமிட்டபடி difference engine இனை வடிவமைத்தனர். அது சரியாக இயங்கியமை இவரது திறமையை நிருபித்தது.

**சார்ல்ஸ் பாபேஜின் கண்டுபிடிப்புகள்**

புகையிரதத்தின் தைனமோ மீற்றர்
நியமத் தொடருந்துப் பாதை (railway track) அளவுக்கருவி
சீரான அஞ்சல் கட்டண முறை
கலங்கரை விளக்கு ஒளி
கீறிவிச் ரேகைக் குறியீடு
சூரிய ஒளி கொண்டு கண்களைச் சோதிக்கும் கருவி

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772260165
0752151580

Facebook group :
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

**மதம் - ஒரு பன்முகப் பார்வை**

**முன்பக்கத் தொடர்ச்சி..**

உலகில் அவதானிக்கக் கூடிய நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு இறைவனின் இருப்பை இவ்வாதம் நிலைநிறுத்துகிறது.

**இயல்த்திட்ட/நோக்குகை கொள்கைவாதம் (Telalogical Proof)**

இயற்கையில் நிகழும் ஒவ்வொரு செயலுக்கும் ஒரு நோக்கம் அல்லது இலக்கு உண்டு. புத்தியில்லாதவை இலக்கை அடையமுடியாது. இவ்விலக்கை நோக்கி மனிதரை வழிநடத்த ஒருவர் தேவை அவர்தான் கடவுள் என்கிறது இவ்வாதம்

இவ்வாறான சிந்தனைகள் இருமைச் சிந்தனைகள் தோன்றுவதற்கும் அவை சார்ந்த பிரச்சனைகள் விரிவடைவதற்கும் காரணமாயின.
அரசா சமயமா?
மண்ணுலகா விண்ணுலகா?
அரசரா போப்பாண்டவரா?
உடலா உயிரா?

என்ற போராட்டம் முதன்மை பெற்றிருந்தது இதனையொட்டியே
1 பாவ உணர்வு/ விதிக் கோட்பாடு
2 நரக தண்டனைகள்
என்பவை தோன்றின இவற்றை பயன்படுத்தி பெரும்பாலான மக்களை மதங்கள் தமது வலைக்குள் சிக்க வைத்தன.

இம்மக்கள் சக்தியைப் பயன்படுத்தி அரசுகளையே அடிமைப்படுத்தி மதங்கள் படிப்படியாக தங்கள் ஆதிக்கத்தை உயர்த்திக் கொண்டன

அறியாமையும் மூடநம்பிக்கையும் நிலவிய காலத்தில் உலக வாழ்விலிருந்து விடுபடவேண்டும் என்ற எண்ணமும் நரக வேதனையிலிருந்து தப்பவேண்டும் என்ற குருட்டு நம்பிக்கையும் இக்கால மக்களின் வாழ்வியல் நெறியாக இருந்தது.

தமிழ் சிந்தனை மரபில் சமயங்களுக்கு ஊடாகவே தமிழ் இலக்கியம் அதனுள் வளர்ச்சி பெற்ற 'பக்தி இலக்கியம்' என்பவை சமூகத்திடையே பெருமளவு தாக்கம் ஏற்படுத்தின.

சைவம், சமணம், பௌத்தம், வைஷ்ணவம், கிறிஸ்தவம் போன்றன தமிழ் மொழியைப் பயன்படுத்தி மெய்யியல், உளவியல் கருத்துக்களையும் அனுபவங்களையும், உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தியுள்ளன.

**மனநிலை நியாயப்படுத்தலும் புனிதமும்**

மனிதன் ஒட்டுமொத்தமாக தனது சூழலுடன் தான் இணைந்து கொள்வதற்கான ஒரு பண்பாட்டுக்கருவியாகவே மதத்தைக் கருதுகிறான். இதனுள் சகமனிதர்கள், இயற்கை உலகு, கடந்த நிலைக்கருத்துக்கள் ஆகியவையும் அடங்கும் இவை பற்றி நோக்கும் போதே மதத்தின் உள்ளகமாக அமையும் புனிதம் என்ற விடயம் பற்றி மனிதன் கவனம் செலுத்துகிறான். இங்குதான் மதத்துக்கான மனநிலை நியாயப்படுத்தல் தோன்றுகிறது. இம்முறையினூடாகவே கடந்தநிலை எண்ணக்கருக்கள் பற்றிய சிந்தனைகளால் குவிவுபடுத்தும்போதே புனிதம் தோன்றுகிறது. இதை அடிப்படையாகக் கொண்டே வழிபாடு முக்கியம் பெறுகின்றது.

இதனூடாக இறப்பு, பிறப்பு, துன்பம், இழப்பு, எதிர்பார்ப்பு என்பவை இதற்கான உளச்சூழலையும், உணர்ச்சிஉந்தலையும் மனிதனுக்கு வழங்குகிறது. இந்தப் பின்புலத்தில்தான் மானிடவியலாளர்கள் மதம் என்னும் நிறுவனம் இல்லாத சமூகமே இல்லை எனக் கூறியுள்ளனர்.

**சமூகவியல் நோக்கில் மதங்கள்**

மதங்கள் ஒழுக்கநெறிகளையும், சமூகப்பெறுமானங்களையும் போதிக்கின்றன.
Ex : அறநூல்கள் - ஒவ்வொரு மதமும் அதன் நம்பிக்கை சடங்கு உலக நோக்கு என்பவற்றுக்கு ஏற்ப அறத்தை போதிக்கின்றன.
தமிழர்களின் அழகியல் உணர்வுகள் படிமங்கள் மதநிலைப்பட்டே வெளிப்பட்டன. ஐரோப்பிய மரபில் அழகியல் சமயநிலைப்பட்டதல்ல.

**மதம் பற்றிய மாக்ஸின் கருத்துக்கள்**

கடவுளும், மதமும், புனிதர்களும் கடந்தகாலத்திற்கு சொந்தமானவர்கள் எனக்கருதும் மாக்ஸ் மதத்தை விமர்சிக்கலானார்.
அவை பலதரப்பட்டவை.
1. சமூகத்தின் உற்பத்தி அமைப்பை அடிப்படையாகக் கொண்டு மதத்தை விளக்குதல்.
2. மதத்தின் வர்க்க உறவை அடிப்படையாகக் கொண்ட விளக்கம்.
3. சாதரண மக்கள் ஏன் மதத்தை விரும்புகின்றனர் என்பதை உளவியல் நோக்கில் விளக்கியமை
மாக்சியம் மதம் எனும் நிறுவனத்தை முழுமையாக நிராகரிக்கவில்லை - (மாக்ஸ், ஏங்கல்ஸ்)
தன்னை முழுமையாக கண்டுகொள்ளாத அல்லது தன்னை மீளத்தொலைத்துவிட்ட மனிதனது சுயஉணர்வும் சுயபிரக்ஞையுமே மதமாகும்.

**கணினிசார் குற்றங்கள் : சட்டங்களுடனான ஒரு பார்வை**
**(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு )**

1 ஒரு கணினிமூலம் செய்யும் செயல் எப்போது குற்றமாகிறது?

2 கணினிசார் குற்றங்கள் தொடர்பான சர்வதேச ரீதியிலான பார்வை.

3 கணினி சார் இலங்கை சட்டங்களும் வேறு சில நாடுகளின் சட்டங்களும்.

4 ஒரு கணினிசார் குற்றம் தொடர்பில் வெவ்வேறு தரப்பினருக்கு இருக்கும் பொறுப்புகள்.

5 கணினிசார் குற்றம் தொடர்பான சர்வதேச சட்டங்களில் உள்ள சில பொதுத்தன்மைகள்.




சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.

BY NC SA